இலவச காலாண்டு சமய இதழ்

AKARATHEEPAM



# அகர தீபம்

WWW.AKARAM.EU 14.01.2016 - 13.04.2016

FREE



# ராமர் அவதாரம்

மாலை: 02 - மலர்: 04

திருவள்ளுவர் ஆண்டு 2047

# நுழைவாயில்...

ஆன்மீக அன்பர்களுக்கு வணக்கம்.

சிறப்பான தைப் பொங்கல் தமிழர் உழவர் விழாவை மிக மகிழ்வாகக் கொண்டாடிய அனைத்து தமிழ் இதயங்களுக்கும் எமது அன்பான வாழ்த்துகளும் பாராட்டுகளும். குறிப்பாக புலம் பெயர் நாடு களில் வாழும் பலர் அந்தந்த நாடுகளின் பெரு நகரங்களில் அரச அமைச்சர்கள் பிரமுகர்களின் பங்களிப்போடு கொண்டாடித் தமிழரின் பண்பாட்டை உலகறிய வைத்த பெருமையை பெற உழைத்து உதவிய அனைத்து நல் இதயங்களும் எமது வரலாற்று நாயகர்களாகப் போற்றப் பட வேண்டியவர்களே.

குறிப்பாகத் தாய் மண்ணையும் மக்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு புலம் பெயர் தமிழரிடம் சுமத்தப் பட்டுவிட்ட கால கட்டம்; இது. இங்கும் ஆளும் சிங்களத் தலைவர்களும் பிற நாட்டு பிரமுகர்களும் தமது அரசியல் அதிகாரப் பொங்கலைக் கொண்டாடி தமிழ் மண்ணையும் மக்களையும் தாமே ஆள்பவர்களாக அடையாளப் படுத்தியதைக் காணும் பொழுது புலத்தின் பொங்கல் ஒரு புரட்சிப் பொங்கலாகவே பார்க்கப்பட வேண்டும். அந்த வகையில் தமிழனத்தின் தமிழ் பண்பாட்டின் தமிழ் மொழியின் காவலர்களாக புலம் பெயர் தமிழர் உள்ளனர் என்ற உண்மை வெளிப்படுகிறது. இதே போன்று சர்வ தேச அரசியலில் எமது உரிமைப் போராட்டம் முக்கிய பாகம் வகிக்கிறது.

வழமைபோலவே குழப்பவாத அரசியல் சிந்தனையாளர்கள் தைப் பொங்கல் நாளையும் தமிழர் புதுவருட நாளையும் ஒன்றாக்கி மக்களைக் குழப்புவதில் ஆர்வம் காட்டுவதைக் காணமுடிகிறது. பொய்களையும் புனைவுகளையும் உண்மையாக்க இத்தகைய திரும்பத் திரும்பக் கூறும் தேவை அவர்களுக்கு இருக்கிறது. இத்தகைய குறுகிய அரசியல் சிந்தனைகளால் நம் இனம் தனது வரலாற்றுப் பெருமைகளையும் சி றப்புகளையும் எறிந்து தொலைத்து விடக் கூடாது என்பதால் இவ்விடயத்தில் மிகுந்த எச்சரிக்கை அவசியம் என்கிறோம்.

தை மாதத்தில் வரும் தைப் பூசத் திருநாள் உலகெங்கும் உள்ள முருகன் ஆலங்களில் சிறப்பு விழாக்காணும் தமிழர் திருநாள் ஆகும். தமிழரின் பண்டைய பண்பாட்டு விழாவாக விளங்கும் இந்த நாளைத் தமிழ் ஆன்மீக அன்பர்கள் பக்தியோடு கொண்டாட வாழ்த்துகிறோம்.

மக்களும் மகேசனும் ஒன்றே என்ற ஆன்மீக தத்துவம்தான் தமிழரின் மதம் என்பதை நினைவு படுத்தி அடுத்த இதழோடு வருவோம் எனக் கூறி விடைபெறும்,

அகர தீபம்,
ஆசிரியர் குழு


**ஆலயங்களுக்கான அறிவித்தல்!**

'அகரதீபம்' இதழை பெற்றுக்கொள்வதற்கும், ஆலயங்களுக்கான விளம்பரங்களைப் பிரசுரிக்கவும் எம்மோடு தொடர்புகொள்ளவும்!

தொர்புகளுக்கு:
00 49 23 81 98 77 897
00 49 173 75 39 277




# அகர தீபம்


**மாலை: 02 - மலர்: 04**

**தலைமை ஆசிரியர்:**
த. இரவீந்திரன்

**உதவி ஆசிரியர்:**
ஆதவன்

**ஆசிரியர் குழு:**
வண்ணை தெய்வம்
வியாசன்

**வடிவமைப்பு:**
இ. ஈழமயூரன்

**ஒப்பு நோக்குனர்:**
திரு. செ. அமுதவாணன்




**தொடர்புகளுக்கு:**
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556
Email: *akaratheepam@akaram.eu*


**www.akaram.eu**

GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY
HOLLAND, SWEDEN, ITALY, CANADA


©ETU e.V. 2014. All rights reserved.



**உலகில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் மிக மிக தொன்மையானதும் திருஞான சம்பந்தர, அருணகிரிநாதர் போன்றோரால் தேவாரப் பதிகம் பாடப்பெற்றதுமான**

# திருக்கோணேஸ்வரர் ஆலயம்

வண்ணை தெய்வம்

இந்துமா சமுத்திரத்திலே தங்கத்தீவு என அழைக்கப்படும் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தலைநகரத்தில் ஒரு முத்தாகத் திகழ்வது திருக்கோணமலையாகும். இங்கு அமைந்திருக்கும் திருக்கோணேஸ்வரர் ஆலயம். இலங்கையில் உள்ள இரண்டு தேவாரப்பாடல்கள் பெற்ற தலங்களுக்குள் இதுவும் ஒன்றாகும். இவ் ஆலயமானது திருக்கோணமலையின் முடிவிலே கடலில் இருந்து முன்னூறு அடி உயரத்திலே அமைந்திருக்கின்றது.

ஸ்ரீதட்சண கைலாய சிவபூமி எனக் குறிப்பிடும் இந்த ஸ்;தலப்பகுதி அண்ட சாகர நித்திய வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் வழிபட்டுய்யும் பொருட்டு திருக்கோவில் கொண்டருளியிருக்கும் திவ்விய சேத் திரங்களுக்குள் மிகச்சிறந்து விளங்குவதும் பிரம்மாதி தேவர்கள் பூசித்து பெரும் பேறு பெற்றதும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரினால் இராமேஸ்வரத்தின் கரையிலிருந்து கோணநாதரை நினைத்து உள்ளம் உருகி தேவாரப் பாடல்கள் பெற்றதும், அருண கிரிநாத சுவாமிகளால் திருப்புகழ் பாடப்பெற்றதும், சித்தாமிர்தசுபம், சிவதீர்த்தம், பாபநாச தீர்த்தம், கன்னியா, மகாவலிகங்கை முதலிய பதினெண் தீர்த்தங்களால் சூழப்பெற்றதும், குளக்கோட்டு மன்னனால் திருப்பணி செய்து வழிபட்டு அருள் பெற்றதுமாகிய திவ்விய திருப்பதியம் பெற்ற ஸ்தலமாக இத் திருக்கோணேஸ்வரம் விளங்குகின்றது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் இவ் ஆலயத்தின்மீது ஒரு பதிகம் பாடியுள்ளார் என்பது இவ் ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்பாகும். இவ் ஆலயத் தின் மகாசக்தி பீடங்களில் தேவியின் இடுப்புப் பகுதி விழுந்த பீடமாகவும், தந்திர

சூடாமணி கூறும் 51 சக்தி பீடங்களில் தேவியின் சிலம்புகள் விழுந்த பீடமாகவும் கருதப்படுகின்றது. ஆனாலும் ஒரு சாரர் போத்துக்கீசரின் படையெடுப்பில் உண்மையான சக்தி பீடம் இடிக்கப்பட்டு விட்டதால் இப்பொழுது அம்மன் சன்னதியே சக்தி பீடமாக வணங்கப்படுகின்றது என்றும் கூறுகின்றார்கள்.

உலகில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் மிகப் பழமையான இவ் ஆலயத்தை இலங்கையை ஆண்ட மனு மாணிக்கராஜா என்ற மன்னன் கி.மு. 1300ம் ஆண்டுக்கு முன்னர் கட்டினார் என வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

கி.பி. 1624ம் ஆண்டில் இலங்கையை போர்த்துக்கீசர் கைப்பற்றியபோது கிழக்குமாகாணத் தளபதியாக இருந்த கொன்ஸ்டன்டீ என்பவனால் இவ் ஆலயம் இடிக்கப்பட்டு ஆலயத்தில் இருந்த கல்வெட்டுப் பிரதி ஒன்றினை போர்த்துக்கேச மன்னனுக்கு அனுப்பி வைத்தாகவும் ஒரு செய்தி உண்டு.

ஆலயத்தின் மூல விக்கிரகம் நகர உலா சென்றபோது போர்த்துக்கேயர்கள் ஆலயக் குருமார்கள் போன்று வேடம் தரித்து ஆலயத்திற்க்குள் புகுந்து ஆலயச் சொத்துக்களை கொள்ளையிட்டதுடன் அதன் பின்பே ஆலயம் இடிக்கப்பட்டதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. (போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் சகல பாகங்களில் உள்ள இந்து ஆலயங்களும் அழிக்கப்பட்டு கிறிஸ்தவ ஆலயங்கள் தோற்றுவிக்கப்பட்டதாக வரலாறுகளில் பதியப்பட்டிருக்கின்றன)

இவ் ஆலயத்தின் தொன்மை பற்றி ஆராய்ந்தவர்கள் திருகோணமலைக் கோட்டைச் சுவரில் "முன்னே குளக்கோட்டன்" என்னும் கல்வெட்டு உள்ளதையும் அதனருகில் கயல் சின்னம் (கயல் பாண்டியருடைய சின்னமாகும்) பொறிக்கப்பட்டிருப்பதையும் கண்டுபிடித்திருக்கின்றார்கள். காலவோட்டத்தில் இக் கல்வெட்டு சிதைந்த போதும் சிலர் அக் கல்வெட்டில் சிதைந்த இடங்களை நிரப்பி அதில் என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்பதையும் அறிய முயற்சித்தபோது அதில் உள்ள வாய்க்கியம் "முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியை, பின்னே பறங்கி பிரிக்கவே! பூனைக்கண், புகைக்கண், செங்கண் ஆண்டபின் தானே வடுகாய் விடும்." என்பதாகும்.

இதன் பொருள் குளக்கோட்டன் என்பவனே இவ் ஆலயத்தை திருப்பணி செய்தான் (திருத் தியமைத்தான்) எனப்படுகின்றது. குளமும் கோட்டமும் கட்டுவித்ததால் இயற் பெயர் மறைந்து குளக்கோட்டன் என்னும் பெயர் வழக்கத்திற்கு வரலாயிற்று.

திருக்கோணமலையிலிருந்து கொழும்பு செல்லும் வழியில் தம்பலகாமம் என்னும் தமிழ்க் கிராமம் இருக்கின்றது. இங்கே ஆதி கோணேச்சரம் என்னும் பெயருடைய ஒரு கோவில் இருக்கின்றது. இது போர்த்துக்கேசர் திருக்கோணமலையில் இருந்த கோணேஸர் ஆலயத்தை அழித்தபோது சில நலன் விரும்பிகள் அவ் ஆலயத்தில் இருந்த சில விக்கிரகங்களை போர்த்துக்கேசருக்குத் தெரியாமல்

காப்பாற்றியாதாகவும், அவ்வாறு காப்பாற்றப்பட்ட விக்கிரகங்களே பின்னர் தம்பலகாமத்தில் பிரதிட்சை செய்யப்பட்டு; பொது மக்களின் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டபோது அதற்கு ஆதி கோணேச்சரம் எனப் பெயர் சூட்டப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இப்படி போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இவ் ஆலயம் சுமார் 450 வருடங்களின் பின்னர் 1952ல் திருக்கோணமலையில் வாழ்ந்த சைவப் பெரியோர்களால் மீளக் கட்டுவிக்கப்பட்டது. முன்னர் இருந்த ஆலயத்துடன் ஒப்பிடும்போது இப்போது உள்ள ஆலயம் மிக மிகச் சிறியதாகும்.



இருந்தபோதும் இவ் ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றால் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். இத் தலத்தில் இறைவன் கோணேஸ்வரரும், இறைவியான மாதுமையாளும் வீற்றிருந்து அருள் புரிகின்றனர். இவ் ஆலயத்தின் தீர்த்தம் பாவநாசம் என அழைக்கப்படுகின்றது. அதன் பொருள் பாவங்களை கழுவித் தீர்க்க வல்லது, என்பதாகும். இவ் ஆலயத்தின் தல விருட்சமாக "கல்லால" என்னும் மரம் விளங்குகின்றது.

இவ் ஆலயத்தில் ஆகம முறைப்படி பூசைகள் இடம்பெறுகின்றன. மகோற்சவம் பங்குனி உத்திரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பதினெட்டு நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது. அத்துடன் சிவராத்திரி தினம் மிக மிக சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

திருஞானசம்பந்தர் தனது ஞானக்கண்ணால் கோணமாமலையாரைக் கண்டு களித்து பாடியருளியது சேதுவின்கண் செங்கண்மால் பூசை செய்த சிவபெருமானைப் பாடிப் பணிந்து போற்றி வாழ்ந்திருந்த காலத்தில் ஆழிப்புடை சூழ்ந்து ஒலிக்கும் ஈழத்தில் மன்னு திருக்கோண மலையை மகிழ்ந்த செங்கண் மழவியுடையாரை வணங்கிப் பாடியருளியது இத் திருப்பதிகம்.

இதிலே "குரைகடலோம் நித்திலம் கொழிக்கும் கோணமலை அமர்ந்தாரே" என்றும் "குடிதனை நெருக்கி பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை அமர்ந்தாரே" என்றும் "தெழித்து முன்னாற்றுஞ் செழுங்கடற்றரனஞ் செம்பொன்னு மிப்பியுஞ் சுமந்து கொழித்து வன்றிரைகள் கரையிடைச் சேர்க்குங் கோணமாமலை அமர்ந்தாரே" என்றும் "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே" என்றும். "விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வன்;செருத்தி செண்பகத்தின் குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமலை அமர்ந்தாரே" என்றும். "துன்றுமொண்பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து தாழ்ந்துறு திரைபல மோதிக் குன்றுமொண் கானல் வாசம் வந்துலவுங் கோணமலை அமர்ந்தாரே" என்றும் திருஞானசம்பந்தர் கோவிலைப் போற்றி பாடியுள்ளார்.

இவ் ஆலயத்தைப்பற்றி ஆதாரங்கள் எதுவும் இல்லாத மற்றோர் செய்தியும்

உண்டு! அதுஆரம்பகாலத்தில் திருக்கோணேசர் மூன்று ஆலயங்களைக் கொண்டதாகக் காணப்பட்டதாம்! அதாவது கடலுக்கு அடியில் ஒரு ஆலயமும், கற்களுக்கு இடையில் ஒரு ஆலயமும், மேற்பரப்பில் மிகப்பெரிய ஆலயமும் இருந்ததாகவும்! போர்த்துக்கேசர் ஆலயத்தை இடிபாட்டுக்கு ட்படுத்தி அழித்ததுடன் ஆலயத்தின் அருகே மிகப்பெரிய கோட்டைகளை அமைத்தனர். அத்துடன் ஆலய விக்கிரகங்களையும் சேதப்படுத்தினர். விக்கிரகங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஆலயக் குருக்கள் அவைகளை கடலினில் போட்டதாகவும் இன்னமும் அவ் விக்கிரகங்கள் கடலுக்கடியில் இருப்பதாகவும் சில செய்திகள் சொல்லப்பட்டாலும் அச் செய்திகளுக்கு எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை. முன்னர் சொல்லப்பட்ட தம்பலகாமத் தில் உள்ள ஆதி கோணேஸ்வரர் ஆலயத்தில்த்தான் அவ் விக்கிரகங்கள் உள்ளன என்பதே உண்மை என வரலாற்றாசிரியர்கள் சொல்லுகின்றார்கள்.



அதே நேரம் இவ் ஆலயத்தைப்பற்றி இன்னுமோர் சுவாரசியமான செய்தி இருக்கின்றது. அது.. இறைபக்தி நிறையவே உள்ள இராவணேஸ்வரன் தனது தாயாரின் ஈமக்கிரிகைகளை கோணேஸ்வரர் குடிகொண்டிருந்த ஆலயக் கடற்கரையில் நடத்த வந்த இடத்தில்த்தான் நன்நீருக்காக தனது வாளால் நிலத்தில் குத்தியபோது அது சிறிதளவு சுடு நீராக வர ஏழு இடங்களில் மாறி மாறிக் குத்த அவை ஒவ்வொன்றிலும் ஏழு வகையான சுடுநீர்கள் சுரந்ததாகவும் அதுவே தற்பொழுது கிண்ணியாவில் உள்ள வென்நீ ர் ஊற்றுக்கள் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறாகப் பல பெருமைகளையும், தொன்மைகளையும், வரலாற்றுச் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு பல்லாயிரக் கணக்கான பக்தர்களுக்கு வரம் அருளிக்கொண்டிருக்கின்றார் கோணேஸ்வரர்.



பாகம் 03

# தெய்வத் தமிழில் வழிபடுவோம்

## சிவருசி தர்மலிங்கம் சசிக்குமார்

சாதுர் வர்ணிகம் ஆதிகாரிகம் ஆகமம்

என்பது, ஆகமம் என்பது நான்கு வர்ணத்தாருக்கும் உரியது என்பது பொருள். மேலும் சான்று பகர்வதாக, இவர்கள் கூறுகின்ற பிரதிட்டை என்பதற்கு வேர்ச் சொல்லே தமிழ்ச் சொல்லாகும். பதிப்பது-பதிட்டை எனப்பட்டது. அதனை வடமொழியில் பிரதிட்டை என எடுத்தாண்டனர்.

வடமொழிவேத விற்பன்னரகளிடேயே பிரதிட்டை என்பது அறியப்படாத ஒன்று. காரணம் அவர்கள் உருவ வழிபாட்டை அறியாதவர்கள். ஆதலால் பிரதிட்டை என்ற சொல் வேதங்களில் வர நியாயமில்லை. சிவாகம மந்திரங்கள் எல்லாம் தமிழில் இருந்து அப்படியே மொழிபெயர்க்கப்பட்டுனள்ளன. எனவே அனைவரும் தமிழ் வழிபாட்டுக்கு திரும்புவதே சாலப் பொருந்தும். ஆகம விதிப்படி அமைந்த கோவில்கள் தமிழகத்தோடு நின்றுவிட்டன. சமபந்தர் கூற்றுப்படி இன்றைய காலத்தில் முன்னைய தமிழக எல்லை என்பதாலும் அற்கு அப்பால் தமிழ் வழங்காததாலும் திரும்ப வந்ததாக பெரியபுராணம் கூறுகின்றது. அங்கண் வடதிசை மேலும் குடக்கின் மேலும்

அருந்தமிழ் வழக்கு அங்கு நிகழததாக பூசை என்பது தமிழ்ச் சொல்.

பூசை என்ற சொல்லே தமிழ் சொல். அதற்கு வடமொழி சொல்லில் வேரேதும் கிடையாது. (காட்டவியலாது). பூவினால் செய்யப்ப்டுவது பூ செய் ஆகி அது பூசை என மருவியது. அதை பல அறிஞர்கள் உறுதிசெய்துள்ளனர். அவர்களுள் டாக்டர் இராதாகிருஸ்ணரும் ஒருவர். எனவே

தமிழர் கண்ட பூசையில் மந்திரங்கள் மட்டும் வேறு விதமாக எப்படி இருக்க முடியும்.

திருமந்திரத்தில் நாலாந்தந்திரத்தில் பாடல்கள் பலவற்றில் திருவபேத சக்கரத்தில் பீஜ வித்து எழுத்துக்களாக கூறுவது தமிழ் மந்திரங்களே.

மேனி இரண்டும் விலங்காமல்

மேனி இரண்டும் இகர விகாரிய மேனி இரண்டும் ஊ-ஆ-ஈ-ஏ-ஓ என்னும் மேனி இரண்டும் ஈ-ஓ-ஊ-ஆ-ஏ கூத்தாமே.

மேலும் இட்ட இதழ்களிடையந்திரத்திலே யட்டஹவ் விட்டத்தின் மேலே ஊவ்விடட்டு கிட்ட இதழ்களின் மேலே கிரோம் சிரோம் இட்டுவா மத்தாங் கிரோங்கின்று மேவிடே

இம்மந்திரங்களை சமஸ்கிருதம் என பலர் கூற முனையலாம். இது புவனாதிபதி சக்கரத்தைக் கூறிய நான்கு திருமந்திர பாடல்களில் ஒன்று. இதில் வரும் உ, கிரோம், சிரோம் என்பன வடமொழி எழுத்ததுகள் அல்ல. இது வித்தெழுத்தின் ஒலிக் குறிப்புகள். இதைத் தமிழிலே தான் மூலர் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் உ, ஆம் என்பன தமிழ் எழுத்துகளே. இதில் வரும் ஹ என்பது ஆய்த எழுத்தின் ஒலிக்குறிப்பு, அஃது என்பதைத் உச்சரித்து பாரத்தால் புரியும்.

வடமொழியில் உயிர் மெய் ஏது? சமஸ்கிருத்தில் உயிர் பதினாறு, மெய் முப்பத்தைந்து என்றே கிடையாது என்பது மொழி அறிஞர்கள் அனைவரும் அறிந்த உண்மை.

அகராதி கழைகாரந்தம் அஸ்டவர்க்க, ப்ரகீர்த்திகா, அஸ்டவர்க்கம் த்வியந்து ஸ்கந்த பீஜம் இதப்பரம்

என்பது வடமொழித் தந்திரத்தால் வருவது. அங்கே பேசப்படுவது அஸ்டவர்க்கம் தானே ஒழிய உயிர் மெய் என்ற பாகுபாடு இல்லை என்பதற்கு அச்சுலோகமே சான்று. அதில் முதல் வர்க்கம் ரு,லு என்பன எல்லாம் சேர்ந்து பதினாறாகவும் ஏனைய ஏழு வர்க்கத்தில் ஐந்தைந்து காட்டி முப்பத்தைந்து எழுத்துகளாகவும் காட்டி உள்ளனர். க ச ட த ப ற என்ற தமிழ மெய் எழுத்து கள் அப்படியே சமஸ்கிருத்தல் எடுத்துபொள்ளப்பட்டு அதற்கு நான்கு வேறு ஒலிக்குறிப்புகளுக்கேற்ப நன்னான்கு வரிவடிவம் கொடுக்கப்பட்டடுள்ளது. அதனால் மேற்கூறிய ஐந்து தமிழ் வல்லின எழுத்துகள் ஒலி மாறுபாட்டால் இருபது எழுத்துகளாக வகுக்ககபட்டன. எனவே சமஸ்கிருதத்துக்கு வரிவடிவம் இல்லை. அனைத்தும் தமிழில் இருந்து கடன் வாங்கப்பட்டன.

(தொடரும்)

# பல்சமய இல்லத்தில் பேர்ன் மாநில அரசின் சிறப்பு விருந்தோம்பல்

## சுவிஸ் பாராளுமன்ற உறுப்பனர்களுக்கு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் அறிமுகம்







சுவிற்சர்லாந்து தலைநகர் பேர்ன் மாநிலத்தில் 02. 03. 2016 மாலை 18.00 மணிமுதல் ஐரோப்பாத் திடலில் அமைந்துள்ள பல்சமய இல்லத்தில் பேர்ன் மாநில அரசு மாநில மற்றும் சுவிஸ் நடுவன் அரச பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அத்துடன் வெளிநாட்டுத் தூதுவர்களுக்குமான சிறப்பு விருந்தோம்பல் பேர்ன் மாநில அரசால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பேர்ன் மாநில அரசின் சார்பில் திருநிறை. கன்ஸ்-யூர்க் கேசெர் (Hans-Jürg Käser) அவர்கள் தலைமை தாங்கினார்.

பேர்ன் பல்கலைக்கழக கலைத்துறை மாணவர்கள் சிறப்பு இசை வழங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. விழா ஏற்பாட்டாளார பேர்ன் மாநிலம் பல்சமய இல்லம் பேர்ன் மாநிலத்தில் அமைந்து உலகின் எட்டுச் சமயங்களும் வாழும் இடமாக இன்று இந்த இல்லம் திகழ்வது தமக்குப் பெருமை அளிப்பதாக திரு. கேசெர் அவர்கள் தெரிவித்திருந்தார். மேலும் சுவிஸ் மக்களை பிளவுபடுத்தக்கூடியதாக அமைந்து, கடந்ட 28. 02. 2016 நடைபெற்ற 'அமுலாக்க முனைப்பு ஒருமனதாக முறியடிக்கப்பட்ட இந்நிலையில் பல்சமய மற்றும் இனமக்கள் ஒன்றுசேர்ந்து வாழ்வதற்கான தேவையினை 83 வீதமான பேர்ன் மக்கள் தமது வாக்கினால் உறுதிப்படுத்தி உள்ளார்கள். மேலும் வழமையாக வாக்களிப்பில் பங்கெடுக்காத பும்பிளிச் தொகுதி மக்கள் கூட இந்த வாக்கெடுப்பில் தமது 63 வாக்கினைப் பதிவுசெய்து பேர்ன் மக்களைத் திரும்பிப்பார்க்க வைத்துள்ளனர். அரசியல் என்பது மொழிகள் இல்லாது, பேச்சுவார்த்தை இல்லாது ஏற்படாது. பல்லினப் பண்பாட்

டுமக்கள் கூட்டாக வாழும் இடங்களில் அவர்கள் தமது பண்பாட்டை, சமயத்தை தமது அடையாளத்துடன் வாழ்வதற்கு ஏதுவான சூழல் இருக்க வேண்டும். இசைந்த ஒன்றுபட்ட வாழ்வு என்பது இருதரப்புச் செயலாகும். சுவிஸ்மக்களும் சுவிசில் குடியேறிய வெளிநாட்டு மக்களும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதுடன், ஒருவரை ஒருவர் மதித்துப் புரிந்துணர்வுடன் வாழ வேண்டும். இதற்கு பேர்ன் மாநிலத்தில் அமைந்துள்ள பல்சமய இல்லம் முழுமையான பங்களிப்பினை அளித்திருப்பதை இட்டுப் பேர்ன் மாநில அரசு மகிழ்சி அடைகிறது. இப் பல்சமய இல்லத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துச் சமயத்தினரையும் நாம் பாராட்டுகின்றோம் என்று கூறித் தனது வரவேற்புரையினை திருநிறை. கன்ஸ்-யூர்க் கேசெர் நிறைவு செய்தார்.

இதனைத் தொடர்ந்து பல்சமய இல்லத்தில் பங்காளராக இருக்கும் அனைதச் சமயங்களின் இடங்களுக்கும் வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்களும், வெளிநாட்டுத் துவர்களும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இராஜதந்திரிகளும் சென்று சுற்றிப்பார்த்தனர்.

பல்சமய இல்லத்தில் சைவத்தமிழ்மக்களைப் பிரதிநிதிப்படுத்தும் சைவநெறிக்கூடத்தால் ஒழுகப்படும் அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவிலையும் வருகைதந்திருந்த அனைவரும் பார்வையிட்டனர். இவர்களுக்காக சிறப்பு அறிமுக நிகழ்வினை திருக்கோவில் ஒழுங்கு செய்திருந்தது. ஆர்வத்துடன் பங்கெடுத்த விருந்தினர்கள் திருக்கோவிலைப் பார்வையிட்டு மகிழந்தனர். இனம், மொழி, சமயம் தொடர்பாக தமக்கு இருந்த கேள்விகளைக் கேட்டுத் தெளிவுபடுத்திக்கொண்டனர்.

சைவநெறிக்கூடத்தால் தமிழ்ப் பண்பாட்டு இரவுச்சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன. நிறைவில் இரவு உணவுடன் இந்நிகழ்வு முடிவடைந்தது. இரவு 23.00 மணிவரை பல்சமய இல்லத்து நிர்வாகிகள், அதன் பங்காளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக கருத்துக்களையும் எண்ணங்களையும் பரிமாறிக்கொண்டனர். சைவநெறிக்கூடம் சுவிஸ் ஈழத்தமிழ் மக்களின் இன்றை வாழ்வியல் நிலையினை ஐரோப்பிய மற்றும் சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தது இங்கு குறிப்பிடத்க்கது.



## பரந்தாமனின் பத்து அவதாரங்கள்

# ராமர் அவதாரம்



தசரதன் என்ற அரசன் அயோத்தியை அரசாண்டு வந்தான். அவனுக்கு கோசலை, கைகேயி, சுமத்திரை என்ற மூன்று மனைவியர் உண்டு. எல்லா செல்வமும் இருந்தும் குழந்தைச் செல்வம் மட்டும் இல்லை. அதனால் தச ரதன் பெரிதும் வருந்தினான். யாகங்கள் பல செய்தான். அதன் பயனாக அவன் மனைவியர் மூவரும் கருவுற்றனர். தச ரதனின் முதல் மனைவி கோசலை ஆவாள். அவள் வயிற்றிலிருந்து திருமால் இராமராகப் பிறந்தார். இரண்டாம் மனைவி கைகேயி வயிற்றில் பரதன் பிறந்தான். மூன்றாம் மனைவி சுமத்திரை வயிற்றில் இலக்குவன், ச த்துருக்கன் என்ற இருவரும் பிறந்தனர். தசரதன் தம் மக்கள் நால்வரையும் குலகுருவாகிய வசிட்டரிடம் கல்வி கற்கச் செய்தான். அவர்கள் நால்வரும் கல்வி கேள்விகளிலும், போர்ப்பயிற்சி களிலும் சிறந்து விளங்கினர்.

விசுவாமித்திரருடன் அனுப்பி வைத்தல் மற்றும் தாடகை வதம்

விசுவாமித்திரர் என்ற முனிவர் காட்டில் வேள்வி செய்தார். தாடகை முதலான அரக்கர்கள் அவர் வேள்விக்கு இடையூறு செய்தனர். விசுவாமித்திரர் தசரதனிடம் வந்தார். தம் வேள்வியைக் காக்கும் பொருட்டு இராமனை அனுப்புமாறு கேட்டார். தசரதர் இராமனுடன் இலக்குவனையும் அனுப்பி வைத்தான். முனிவர் பலா, அதிபலா என்ற மந்திரங்களை உபதேசம் செய்தார்.

இராமரும், இலக்குவனும் தாடகை முதலாய அரக்கர்களை வதம் செய்து முனிவர் வேள்வியைக் காத்தனர். வேள்வியும் சிறந்த முறையில் முடிந்தது.

மிதிலை நகர் செல்லுதலும் திருமணமும்

பின் விசுவாமித்திரர் இராமனையும்

இலக்குவனையும் அழைத்துக் கொண்டு மிதிலை சென்றார். சனகன் என்ற மன்னன் மிதிலையை ஆண்டு வந்தான். அவனுக்குச் சீதை என்ற ஓர் அழகிய மகள் இருந்தாள். தம்மிடம் உள்ள வில்லை வளைப்பவருக்குச் சீதையைத் திருமணம் செய்து கொடுப்பதாக அவன் அறிவித்திருந்தான். மன்னர்கள் பலர் அவ் வில்லை வளைக்க முயன்றனர், முடியவில்லை. இராமர் அவ் வில்லை வளைத்து முறித்தார். சனகன் மகிழ்ந்து தன் மகள் சீதையை இராமருக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

பட்டாபிஷேக ஏற்பாடுகளும் காடேகுதலும்

திருமணம் முடிந்து வந்த இராமருக்கு முடிசூட்ட எண்ணினான் தசரதன். அதற்கு நாளும் குறித்து விட்டான். எல்லா ஏற்பாடுகளும் தயாராகி விட்டன. கைகேயியின் தாதி கூனி ஆவாள். அவள் கைகேயியின் மகன் பரதனுக்கு முடிசூட்ட எண்ணினாள். அதனை கைகேயியிடம் தெரிவித்தாள். முதலில் கைகேயி ஒப்புக் கொள்ளவில்லை. பிறகு பலவிதமாகச் சொல்லிக் கூனி கைகேயியின் மனத்தை மாற்றிவிட்டாள். கைகேயி, தசரதனிடம் பிடிவாதம் செய்து தம்மகன் பரதன் நாடாளும்படியாகவும், இராமர் பதினான்கு ஆண்டு காடாளும்படியாகவும் உறுதிமொழி வாங்கி விட்டாள். தந்தை சொற்படி இராமர் உடனே காட்டிற்குச் சென்றார். சீதையும், இலக்குவனும் உடன் சென்றனர். அதனை அறியாத தசரதன் உயிர் துறந்தான்.

கேகய நாட்டிற்குச் சென்ற பரதன் அப்பொழுதுதான் திரும்பி வந்தான். வந்தவுடன் நடந்ததை அறிந்தான். மிகவும் வருந்தினான். தன் தாயை வெறுத்தான். தந்தைக்குரிய இறுதிக் கடன்களைச் செய்தான். உடனே இராமரை அழைத்து வரக் காட்டிற்குச் சென்றான். காட்டிற்குச் சென்ற பரதன், இராமரைக் கண்டு வணங்கினான். திரும்பி வந்து நாடாளும்படி வேண்டினான். தந்தை சொற்படி பதினான்கு ஆண்டு கழித்து வருவதாகவும், அதுவரை பரதனை நாட்டை ஆளும்படி இராமர் கூறினார். பரதன் இராமரின் பாதுகைகளைப் பெற்று வந்து, அரசப் பிரதிநிதியாக ஆண்டு வந்தான்.

சூர்ப்பனகையின் மூக்கறுத்தல்

இலங்கையை ஆண்டு வந்த இராவணன் என்னும் அரக்கன் தங்கை சூர்ப்பனகை ஆவாள். அவள் காட்டில் வாழும் இராம இலக்குவனரைக் கண்டாள். தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தினாள். இலக்குவன் கோபம் கொண்டு சூர்ப்பனகையின் மூக்கை அறுத்து எறிந்தான். சூர்ப்பனகை அழுது கொண்டு இராவணனிடம் சென்றாள். நடந்த செய்திகளைச் சொல்லாமல், இராமன் மனைவி சீதையை உனக்காகத் தூக்கி வர முயன்றேன். அவன் தம்பி இலக்குவன் என் மூக்கை அறுத்து விட்டான் என்று கூறி அழுதாள். இராவணன், சூர்ப்பனகையைச் சமாதானப்படுத்தி அவர்களைத் தண்டிப்பதாகவும் கூறினான்.

மாயமானாக மாரீசனை அனுப்பி இராம இலக்குவரைத் தனியாகப் பிரித்தான். பிறகு, சீதை தனித்து இருப்பதை அறிந்து பர்ணசாலையோடு பெயர்த்துச் சீதையை தூக்கிக் கொண்டு சென்றான். வழியில் கழுகு அரசனாகிய சடாயு தடுத்தான். அவனை வெட்டி வீழ்த்தி விட்டு இராவணன் இலங்கையில் உள்ள அசோக வனத்தில் சீதையை மறைத்து வைத்தான். திரும்பி வந்த இராம,

இலக்குவர் சீதையைக் காணாமல் தேடினர். வருந்தி வந்து கொண்டிருக்கும்பொழுது குற்றுயிராய்க் கிடந்த சடாயு என்ற கழுகு அரசன் உண்மையைக் கூறிவிட்டு உயிர் துறந்தான். தொடர்ந்து தேடி வரும்பொழுது சுக்ரீவனைச் சந்தித்தனர்.

இராமருக்கும் சுக்ரீவனுக்குமான சந்திப்பு

சுக்ரீவன் குரங்குகளுக்கு அரசனாகிய வாலியின் தம்பி ஆவான். வாலி தன்னைத் துரத்தி விட்டதாகக் கூறினான் சுக்ரீவன். உடனே இராமர் வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டம் கட்டினார். பிறகு சுக்ரீவனும் அனுமாரும் குரங்குகளும், இராமருக்குத் துணையாக வந்தனர். இலங்கையில் சீதை இருக்கும் இடத்தை அறிந்து வருமாறு, இராமர் அனுமாரை அனுப்பினார். உடனே அனுமார் கடலைத் தாண்டி இலங்கையை அடைந்தார். எங்கும் தேடினார். கடைசியாக அசோக வனத்தில் சீதை இருப்பதைக் கண்டார். இராமர் கூறிய செய்திகளைக் கூறிவிட்டுத் திரும்பி வந்தார். இராமரிடம் வந்து சீதை இருக்கும் இடத்தைத் தெரிவித்தார்.

அனைவரும் கடலைக் கடந்து இலங்கைக்குச் செல்ல வேண்டும். எனவே குரங்குகள் கல்லையும் மரத்தையும் கொண்டு கடலில் பாலம் கட்டின. அந்தப் பாலத்தின் வழியாக அனைவரும் கடலைக் கடந்து இலங்கைக்குச் சென்றனர்.

விபீஷணன் இராமரிடம் சரணாகதி செய்தல்

இராவணனுக்குக் கும்பகருணன், வீடணன் என்ற இரண்டு தம்பியர் உண்டு. அவருள் வீடணன் நல்ல அறிஞன். அவன் இராவணனுக்குப் பல அறிவுரைகள் கூறினான். சீதையைக் கொண்டு போய்விட்டு விடும்படியும் சமாதானமாக வாழும்படியும் கூறினான். இராவணன் மறுத்து விட்டான். எனவே, வீடணன், இராவணனை விட் டுவிட்டு இராமர் பக்கம் வந்து சேர்ந்து கொண்டான்.

போர்

பிறகு, இராமரின் படைகளுக்கும், இராவணனின் படைகளுக்கும் போர் தொடங்கியது. போரில் இராவணன் தம்பி கும்பகர்ணன் மாண்டான். இராவணன் மகன் இந்திரசி த்தும் மாண்டான். படைவீரர்கள் பலரும் மாண்டனர். கடைசியாக இராமருக்கும் இராவணனுக்கும் போர் கடுமையாக நடந்தது. முடிவில் இராமர், இராவணனைக் கொன்றார். அதனைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து ஆரவாரித்தனர். இலங்கைக்கு அரச னாக வீடணனுக்குப் பட்டம் கட்டினார் இராமர்.

இராமர் சீதையை மீட்டுக் கொண்டு அயோத்திக்குத் திரும்பி வந்தார். பரதன் இராமரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தான். ராமர் அயோத்திக்கு அரசராக முடிசூட்டிக் கொண்டார். தம்பியர் துணையுடன் சிறந்த முறையில் நாடாண்டார். மக்கள் அனைவரும் எல்லா நலனும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.



# தேவை நிம்மதி!

கனகம்-செல்வம், காமினி-பெண் ஆகியவை மன அமைதியை அழிப்பன. வாழ்வில் என்ன என்ன அடையவேண்டும் என்ற எண்ணங்கள் தோன்றி மனதை அலைக்கழிக்கும்.

ஒருவரை உனது வாழ்வின் தேவைகளை எழுதிக்கொடு என்றதும், மனதில் தோன்றிய ஆசைகளையெல்லாம் வரிசைப்படுத்தி மனைவி, பணம், புகழ், மதிப்பு... இப்படி எழுதியவனுக்கு ஓர் சந்தேகம் வந்தது! எல்லாமும் எழுதி விட்டோமா என்று? அனைவரிடமும் காண்பித்தான். அனைவரும் ஒப்புக் கொள்ளும்படியாக எழுதியிருந்தான்.

சந்தோஷத்துடன் அந்தத் தேவைகளை இறைவனிடம் கொடுக்க நினைத்தவன் ஒரு பெரியவரை சந்தித்தான். அவரிடமும் காண்பித்தான். அவர் எழுதியதை எல்லாம் படித்துவிட்டு, எல்லாம் சரி! இதில் எழுதியிருப்பதையெல்லாம் அடைந்தபின் நீ என்ன செய்யப் போகின்றாய்? என்ற கூற்றிற்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

அப்போது அவர் எல்லாவற்றையும்விட மன அமைதியை நாடு! அதைத் தேடு! அது கிடைத்தால் நீ எல்லாவற்றிலும் வெற்றியடைவாய்! அப்படியின்றி எல்லாம் கிடைத்து விட்டால் உனக்கு மன நிம்மதியிருக்காது என்றார். பாற்கடலை கடைந்தபோது கிடைத்த லட்சுமியின் அதி அழகால் ஸ்ரீமன்நாராயனுக்கு நிம்மதியும் உறக்கமும் பறிபோயின. பொன்னாசை அளவுக்கு மீறினால் நிம்மதிபோகும் என்பதை எடுத்துரைகின்றது ஸ்ரீநாராயணனின் அனந்த சயன காட்சி.

எனவே நிம்மதி, மனநிம்மதிதான் ஒருவருக்குக் கிடைக்க முயற்சிக்க வேண்டும்.

மற்றவை கர்ம வினைப்படி அவரை வந்து சேரும். ஆன்மாவின் தன்மை உணர்ந்து அதற்கு உடல் ஒத்து ழைப்பு அளித்தால் நிம்மதி நெஞ்சி னுள்ளே இருப்பதை உணரலாம். தீவிர சிந்தனையில் ஆழ்ந்தவன், அதிகமான செல்வம் அடைந்தவன், ஆபத்தை நெருங்கியவன் ஆகியோருக்கு நிம்மதி கெட்டுவிடும். உறக்கம் வராது.

மனதில் நிம்மதியும் தூக்கமும் இன்றித் தவித்த ஒருவன் அருகில் இருந்த ஆசி ரமத்தில் பெரியவரை சந்தித்தான். அவர் தேவையில்லா சுமைகளை சுமப்பதும், தெரியக்கூடாத ரகசியங்களை தெரிந்து கொள்வதாலும் நிம்மதி போய் விடுகின்றது. நீ முதலில் ஆசிரமத் தில் சாப்பிடு என்றார். சாப்பிட்டபின் ஒரு படுக்கையை காண்பித்து படுக்கச் சொன்னார்.

அவனிடம் ஒரு கதை சொன்னார் பெரியவர். ''ரயில் புறப்படும் போது அவசரமாக தலையில் சுமையுடன் ஒருவன் ஓடிவந்து ஏறி இடம் பிடித்து அமர்ந்து கொண்டான். ரயில் புறப்பட்டது. ஆனால் அவன் தன் தலையிலிருந்த சுமையை மட்டும் கீழே இறக்கி வைக்கவில்லை. அருகிலிருந்தவர் அதை கீழே இறக்கி வைக்கச் சொன்னார். அவன் வேண்டாம். ரயில் என்னை மட்டும் சுமந்தால் போதும். என் சுமையை நான் சுமந்து கொள்வேன் என்றான்.

இந்தக் கதையைக் கேட்டவன் சிரித்துவிட்டு, 'பைத்தியக்காரன், இரயிலை விட்டு இறங்கும் போது மூட்டையை தூக்கிக்கிட்டு இறங்கினால் போதாதா என்றான்'. உன்னைப்போல் அவனுக்கும் அது தெரியவில்லை என்றார் பெரியவர். என்ன சொல்கிறீர்கள் என்றவனிடம், 'வாழ்க்கை என்பது ரயில் பயணம் போன்றது. பயணம் முழுவதும் சுமந்து கொண்டு செல்பவர்கள் நிம்மதியாக வாழமுடியாது, தேவைப்படுபனவற்றை மட்டும் மனதில் வைத்துக் கொள்'. என்று அவர் கூறியபோது அவனுக்கு புரிய ஆரம்பித்தது, தூக்கம் வந்தது. சுகமாகத் தூங்கினான்.

காலையில் எழுந்திருக்கும் போது பெரியவர் அருகில் இருக்கக் கண்டான். எழுந்து அந்தத் தலையணையை தூக்கு என்றார். அவ்வாறே செய்தவன் ஆ! வென்று அலறினான். தலையணை அடியில் ஓர் நாகம் சுருண்டிருந்தது. ஐயா, என்றவனிடம் நீ! உன் தலைக்கு அருகில் பாம்பு இருக்கிறது என்ற இரகசியம் உன் மனதிற்கு தெரியாது! அதனால் நிம்மதியாய் தூங்கினாய். இப்போது நிம்மதி எங்கிருக்கிறது எனப் புரிந்து கொண்டிருப்பாய்.'' என்றார். இரகசியங்கள் இல்லா மனமே நிம்மதி கொள்ளும்.

வாழ்க்கையில் முன்னேற்றம், வெற்றி, அதனால் பணம் வசதி, வாய்ப்புகள் பெருக அதிகாரம் அவசியமாகும். எது இருந்தும் அங்கே நிம்மதி வேண்டும். உடல் ஆரோக்கியம் வேண்டும். மனிதநேயம்கொண்டு பகிர்ந்து கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும்.

கோடீஸ்வரர் ராக்பெல்லர் அமெரிக்க மக்களால் மிகவும் வெறுக்கப்பட் டதற்கு காரணம், தான் வாழ்வில் முன்னேற, தன் செயல் அனைத்திலும் வெற்றி பெற, சாம, தான, பேத, தண்டம் என அனைத்துக் கொடிய வழிகளையும் பின்பற்றியதே. சுமார் ஐந்துலட்சம் டாலர் ஆண்டு வருமானம் பெற்ற அவருக்கு 53வயதில் உடல்நிலை மோசமானது.

மருத்துவர் ஆலோசனைப்படி கஞ்சியும் பாலும் சாப்பிட்டார். எவ்வளவு இருந்து என்ன பயன். ஆனால் அவர் சுவாமி விவேகானந்தரை சந்தித்தபின் மாற்றம் கொண்டார். கறை படிந்த பணம் எனப் பலரும் வாங்க மறுத்தும், கலங்காமல் தொடர்ந்து மக்களுக்கு மனித நேயத்துடன் தொண்டு செய்தார். மனநிம்மதி கொண்டார். உடல் ஆரோக்கியம் அடைந்து 92வயது வரை வாழ்ந்துள்ளார்.

மோசமான ஓர் பணக்காரராயிருந்தவருக்கு, மனிதநேயம் கொண்டு கருணை உள்ள பரோபகாரி என்ற நிலைக்குவந்த அந்த மனித ஆன்மாவிற்குக் கிடைத்தது மனநிம்மதி மற்றும் உடல் ஆரோக்கியம். எனவே உங்களிடம் இருப்பதை இல்லாதவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். அது அறிவாக இருந்தாலும் சரி, பணம், பொருளாக இருந்தாலும் சரி. அந்த மனிதநேயம் நீங்கள் கொண்டால், ஆன்மா நிம்மதி கொள்ளும்.

ஒரு ஞானியிடம் வந்த செல்வந்தர் தனக்கு நிம்மதியில்லை என்றார். உங்களிடம் இருக்கும் செல்வத்தை வைத்து எல்லாவற்றையும் வாங்கி அனுபவிக்கலாமே என்றார் ஞானி. செல்வந்தர் எனக்குத் தேவை மகிழ்ச்சி அதை எப்படி வாங்கமுடியும் என்றார்.

ஞானி அவரை ஓர் விளையாட்டு அரங்கிற்கு அழைத்து வந்தார். பலர் உற்சாகத்து டன் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஞானி ரசித்தார். செல்வந்தர் பந்து என்னைப்போல உதை படுகின்றது எனக் கவலை கொண்டார்.

ஞானி, செல்வந்தரை ஓர் கச்சேரிக்கு அழைத்துச் சென்றார் அங்கு புல்லாங்குழலின் நாதம் இசையாக அனைவரையும் ஆனந்தத்தில் மூழ்கடித்தது. சிறிது நேரம் அமைதியாகச் சென்றது. நிகழ்ச்சி முடிந்தது இருவரும் காரில் வந்து கொண்டிருந்தனர்.
ஞானி செல்வந்தரைப் பார்த்து பந்துக்கும், புல்லாங்குழலுக்கும் என்ன வித் தியாசம் என்றார். செல்வந்தர் அது பந்து, இது புல்லாங்குழல் என்றார்.

பந்துக்கும், புல்லாங்குழலுக்கும் தேவை காற்றுதான். பந்தின் உள்ளேயே அடைபட்டு கிடப்பதால் அது உதை படுகின்றது. புல்லாங்குழலில் அது அவ்வப்போது வெளியே வந்து விடுவதால் அது இனிமையைத் தருகிறது. மனதிற்கு நிம்மதி அளிக்கின்றது என்றார் ஞானி.

செல்வந்தருக்கு ஏதோ புரிந்தமாதிரி இருந்தது. செல்வந்தர் நினைத்தார். பந்தின் காற்றுப்போல் செல்வம் நம்மிடம் இருந்தால் அதில் இன்பங்களைவிட துன்பங்கள்தான் அதிகம். புல்லாங்குழல் காற்றுப்போல் செல்வம் அவ்வப்போது வெளியேறினால் அது நிம்மதியும் இன்பமும் தரும் என்பதை உணர்ந்தார்-குருஜி.



# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

சீர்காழியில் சிவபாதவிருதயர் தன் மனைவி பகவதியுடன் தினமும் தங்களுக்கு சைவநெறி தழைத்திடும் வண்ணம் ஓர் குழந்தை வேண்டுமென பிரார்த்தித்து பெருமான் அருள் புரிய ஆண்குழந்தையை பெற்றனர். குழந்தை வளர்ந்தது. சம்பந்தர்க்கு ஆண்டுகள் இரண்டு முடிந்தது. நாள் தோறும் சிவபாத விருதயர் தோணிபுரத்தே உள்ள நீர்நிலையில் நீராடி கழுமலநாதனை நித்தமும் வணங்கியபின் தன் இல்லத்தில் உள்ள மற்றப் பணிகளைப் பார்ப்பார்.

வழக்கம்போல் அன்றும் நீராட சிவபாதவிருதயர் கிழம்ப குழந்தை தானும் வருவேன் என அடம்பிடித்தது. மகனை உடன் அழைத்துச் சென்றார். மைந்தனைக் குளக்கரையில் இருக்கச்செய்து குளத்தில் இறங்கி நீரில் மூழ்கி குளிக்க ஆரம்பித்தார். தந்தையைக் காணவில்லை எனக் குழந்தை குரல் கொடுக்க, அழுதகுரல் கேட்டு திருத்தோணிபுரத்து றையும் பெருமான் விண்ணிருந்து மண்ணிற்கு வந்த குழந்தைக்கு உண்ண அமுதுடன் சிவஞானம் கொடுக்கச் சொன்னார். பிராட்டியும் பொற் கிண்ணத்தில் இன்னமுதப்பால் செய்து சிவஞானம் குழைத்து எடுத்து ஊட்டினார். குழந்தையின் அழுகை நின்றது.

குளித்து முடித்த தந்தை குளக்கரையில் தம் புதல்வன் எச்சில்பால் உண்டவாயும் கையிற் பொற்கிண்ணமுமாக இருப்பது கண்டு சினந்தார். அருகிருந்த சிறுகோல் எடுத்து யார் கொடுத்தது என அடிக்கக் கை ஓங்கினார். குழந்தை தலைக்குமேல் விரல் ஒன்றினால் பரம்பொருளைச் சுட்டிக்காட்டி "சிறப்பதோடுடைய செவியன்" எனத்தொடங்கி பதிகம் பாடினார்.

நான் கூறப்போகின்ற நெறி இருக்கின்றதே அது சிவனடியே சிந்திக்கும் ஒரு நெறி. அது திருநெறி. அதுவும் தமிழ்நெறி. தமிழர்தம் வாழ்வியல் நெறி. இந்தத் திருநெறிய தமிழ் வல்லர் தொல்வினைதீரும். என்றார். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்றார். நம் தமிழ் சமுதாயத் திற்கு சிவனடி பரவும் ஒருநெறியே என் திருநெறி என்றார்.

சிவதலங்களில் வழிபாடு நடத்த விரும்பினார். 3 வயது குழந்தையை தன் தோளில் தூக்கிக்கொண்டு திருகோலக்க என்ற தலத்திற்குச் சென்றார் சிவபாதவிருதயர். ஞானசம்பந்தன் இறைவனை "மடையில் வாளை பாய" என்ற பாடலை பாட கைத்தாளமிட்டதால் கைசிவக்க இறைவன் பொற்றாளம் கொடுக்க அன்னை ஓசை கொடுத்த நாயகியாக உலகெலாம் வியக்க தாளம் பெற்று பாடல் பாடினார். அப்படியே நனிபள்ளி சென்று வழிபட்டு சீர்காழி வந்தார்

ஞானசம்பந்தன் புகழ்கேட்டு திருநீலக ண்டயாழ்ப்பாணர் தன் துணைவி மதங்க சூளாமணியுடன் வர அவர்களை வரவேற்று இறைமுன் பதிகம் பாட பாணர் யாழ் இசைத்தார், தீண்டத்தகாதவராய் இருந்த பாணரை ஞானசம்பந்தன் தம்முடன் யாழ் இசைக்க வைத்துக் கொண்டார். அவரை அழைத்துக்கொண்டு தில்லை சென்றார். வழியில் பாணர் ஊராகிய எருக்கத்தம்புலியூர் சென்றார், கொளுத்தும் வெய்யிலைப் பாராது மாறன்பாடி என்ற ஊரை அடைந்தார். பெருமான் அந்த ஊர் அடியார் கனவில் தோன்றி ஞானசம்பந்தன் என்பால் அலைகின்றான், அவனுக்கு முத்துச்சி விகை மணிக்குடை சின்னம் அளியுங்கள் என்றார்.

பல தலங்களில் பதிகம் பாடி வழிபட்டு மீண்டும் சீர்காழி வந்தார். ஏழாம் ஆண்டில் ஞானசம்பந்தனுக்கு பூணூல் அணிவிக்க அந்தணர்கள் மந்திரம் சொல்ல ஞானசம்பந்தர் சொல்லவே ண்டிய மந்திரம் ஐந்தெழுத்து என்றார். அப்பரடிகள் தன்னைக் காணவருகின்றார் என்பதை அறிந்த ஞானசம்பந்தர் எதிர்கொண்டழைத்தார். சிலகாலம் அங்கிருந்து அப்பரடிகள் சோழ நாட்டுப் பயணம் மேற்கொண்டார்.

ஞானசம்பந்தர் திருத்தலப்பயணமாக திருப்பாச்சிலாசிரமம்- திருவாசி சென்றார். கோவிலில் மங்கைப் பருவம் எய்திய பெண் ஒருத்தி உணர்ச்சியற்ற நிலையில் இருப்பதைக் கண்டார். அவர் கொல்லிமழவன் என்ற குறுநில மன்னனின் மகள். அவள் பிணியை இறைவன் தீர்க்க கோவிலில் வைத்திருந்தார். ஞானசம்பந்தர் பதிகம் பாடி நோய் தீர்க்க வழவனும் அவளும் அடிவணங்கினர். திருக்கொடிமாடசெங்குன்றூர் - திருச்செங்கோடு சென்றார். அப்போது பனிக்காலமாகையால் அடியவர்கள் சிலர் அவதிப்பட்டனர். அங்குள்ள மடம் ஒன்றில் தங்கி அர்த்தநாரீஸ்வரர் மீது "வெந்த வெண்ணீறணிந்து" என்ற பதிகம் பாடினார்.

பலதலங்களை வழியில் வழிபட்டு திருப்பட்டீச்சுரம் அடைந்தார். அங்கு பூதகணங்கள் ஞானசம்பந்தர் தலைமீது முத்துப் பந்தலைப் பிடித்தனர், பின்னர் அடியவர்களிடம் கொடுத்து மறைந்தனர். பட்டீசுவரை வணங்கி திருவாவடுதுறையை அடைந்து

தங்கினார். அப்போது அங்குவந்த சிவபாதவிருதயர் வேள்வி செய்ய பொருள் வேண்டும் என ஞானசம்பந்தரிடம் கேட்டார். திருவாவடுதுறையானைப் பதிகம் பாடி 1000 பொற்காசுகள் பெற்று தந்தையாரிடம் கொடுத்தார். தலங்களை வழிபட்டு தருமபுரம் வந்தார். அங்கு ஞானசம்பந்தர் பாணர் வேண்டுகோளுக்கு இணங்கி யாழ்கருவியில் அடங்காத பாசுரம் பாடினார்.

சாத்த மங்கை என்னும் தலத்திற்கு சென்றார். அந்த ஊரின் நீலநக்கர் ஞானசம்பந்தரை தன் குருவாக நினைத் திருந்தார். இவர் வருகிறார் என்ற செய்தி அவருக்கு பரவசமூட்டியது. ஞானசம்பந்தர் கோரிக்கையை ஏற்று பாணரை தம்முடைய வீட்டிலேயே தங்கவைத்தார். அங்கு சிலநாள் தங்கி திருநாகைக் காரோணமுடையாரை வணங்கி திருச்செங்காட்டாங்குடி நோக்கித் தன் பயணம் தொடர்ந்தார். பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்டர் ஞானசம்பந்தர் வருகையை எதிர்பார்த்து வணங்கி வழிபாடு செய்தார். சிறுத்தொண்டரிடம் விடைபெற்று திருமருகல் ஆலயம் சென்றார்,

அது நள்ளிரவு நேரம். ஓர் அணங்கையின் அழுகுரல் கேட்டது. அதிகாலை எழுந்து நீராடி அழுகுரல் வந்த திசையில் சென்றார். அங்கு ஒருவன் இறந்திருந்தான். அருகே ஓர் பெண் அழுது கொண்டிருந்தார். அவள் வைப்பூரிலுள்ள தாமன் செட்டியாரின் மகள். அவருக்கு மொத்தம் ஏழு பெண்கள். இறந்தவன் தாய் மாமன். மாமனிடம் பெரும் பொருள் பெற்று மூத்தவளை மணம் முடித்து தருகின்றேன் எனக்கூறி வேறு ஒருவருக்கு மணம் முடித்தார். இப்படியே அறுவருக்கு மணம் முடிந்து எனக்கும் அதேபோல் தந்தை செய்ய முடிவு செய்தது தவறு என்பதால் நான் மாமனுடன் வந்தேன். இரவில் நாகம் தீண்ட மாண்டான். இது என்ன நியாயம் என்று புலம்பினாள்.

இறந்தவரை உயிர்ப்பிப்பது என் வேலையல்ல. இருந்தாலும் இப்பெண்ணிற்காக நீதி கேட்டார் இறைவனிடம். பதிகம் பாடினார். இறந்தவன் உயிர்பெற்றான். அங்கு சில காலம் தங்கியிருந்து வழிபாடு செய்தார். திருப்புகலூர், வர்த்தமானிச்சுரம் சென்றார். வர்த்தமானிச்சுரத்து பெருமானை வணங்கி முருகரையும் சேர்த்து பதிகம் பாடி அவருடைய மடத்தில் தங்கினார். ஞானசம்பந்தர் திருப்புகலூரில் இருக்கிறார் என அறிந்து அப்பரடிகள் வந்தார். இருவரும் சேர்ந்து பயணம் செய்ய விரும்பினர். அம்பர்மாகாளம் வணங்கி திருக்கடவூர் செல்ல குங்குலிய கலயர் வரவேற்று வழிபாடு செய்தார். பின் திருவீழிமிழலை சென்றனர்.

அங்கு சீர்காழியிலிருந்து வந்த அடியார்கள் ஞானசம்பந்தரை சீர்காழிக்கு அழைக்க அவர் அங்கு சென்று இறைவனை தரிசிக்க விரும்பினார். ஆனால் அன்று இரவு கனவில் பெருமான் நாளை காலை திருத்தோணிபுரத்து பெருமாட்டியோடு காட்சியை விண்விழி விமானத்தே காண்பாய் என அருளினார், அதிகாலை நீராடி அக்காட்சியை கண்டு ஆனந்தம் அடைந்தார். அந்த ஊரில் அப்போது பஞ்சம் ஏற்பட்டது.

பெருமான் இருவர் கனவில் தோன்றி. நாட்டில் நடக்கும் உலகியல்

நிகழ்ச்சியால் அடைந்த தீய பசி உம்மையடையாதெனினும் உம்பால் நிலவும் அடியோர் வாட்டம் அடையாவண்ணம் நாளும் ஓர் பொற்காசு கிழக்கும் மேற்குமாக பலிபீடத்தில் தருவோம் என்றார், இருவரும் தம் கனவை பரிமாறி பொற்காசு பெற்று இருமடங்கள் அமைத்து அடியார்களுக்கு உணவு அளித்தனர். நாவுக்கரசர் மடத்தில் உணவு முடியும்போதுதான் சம்பந்தர் மடத்தில் ஆரம்பிக்கும். ஏன் இந்தக் காலதாமதம் என்றார் ஞானசம்பந்தர்,

அது நல்ல காசு தாங்கள் கொடுக்கும் காசு மாற்று குறைந்தது. அதனால் பொருள் வாங்க சிறிது காலதாமதம் ஆகிறது என்றனர். ஞானசம்பந்தர் வீழிநாதன்முன் சென்று தமக்கும் மாசில்லா காசு கேட்டார். ஆரூரர் திருவீழிமிழலை வந்து அப்பருக்கும் ஞானசம்பந்தருக்கும் பொன் கொடுத்து என்னை ஏமாற்றமுடியாது. நீர் ஏன் பொன் கொடுத்தீர் என்று எனக்குத்தெரியும் எனப் பாடினார்.

இருவரும் திருமறைக்காடு சென்றனர். வேதம் மறைக்காடாரை வணங்கிக் கதவை மூடியதால் அடியவர்கள் மாற்று வழியில் உள்ளே சென்று வழிபாடு செய்வதைப் பார்த்த ஞானசம்பந்தர் அப்பரடிகளிடம் மறைக்கதவு திறக்கப் பாடச்சொல்ல அவரும் பத்துப் பாடல்கள் பாடக் கதவு தான் திறந்தது. வழிபாடு முடிந்ததும் அப்பரடிகள் ஞானசம்பந்தரிடம் கதவை மூடவும் பின் திறக்கவும் பதிகம் பாடச்சொல்ல அவர் ஒருபாடல் பாடியவுடன் கதவு மூடியது. தான் பாடிய 10வது பாடலுக்கு திறந்த கதவு ஞானசம்பந்தர் பாடிய முதல் பாட்டிற்கே மூடியது மனதில் நினைத்து இறைவன் திருக்குறிப்பை அறியாமல் தவறு செய்தோமோ என வருந்தினார். பெருமான் அடியார்வேடத்தில் தோன்றி நாம் வாய்மூரில் இருப்போம் நம்மைப்பின் தொடர்ந்து வாரும் என்றார். அப்பரடிகள் பின் தொடர அண்மையில் இருப்பது போலத் தோன்றி மறைந்தார்.

ஞானசம்பந்தர் எழுந்து அப்பரடிகள் வாய்மூர் சென்றிருப்பதை அறிந்து தாமும் சென்றார். அவரைக் கண்டவுடம் அப்பரடிகள் மகிழ்ந்து, வாய்மூர் பெருமானே உன் சதிர் ஆட்டம் என்னிடம் செல்லும், மறைக் கதவம் திறக்கப்பாடிய என்னைவிட உறுதி பொருள் பாடி அடைப்பித்த ஞானசம்பந்தர் உம் எதிர் நிற்கிறார் உம்மை மறக்கும் வல்லமை உமக்கு உண்டா உன் அருட் காட்சியைக் காட்டு எனப் பாடினார். வாய்மூரில் சில நாள் தங்கி திருமறைக்காடு சென்றனர்.

பாண்டிய நாடு சமண நெறியில் சிறந்திருந்தது. மன்னன் கூன் பாண்டியன் சமணத்தைச் சார்ந்தான். அவரின் மனைவி மங்கையர்க்கரசி மற்றும் அமைச்சர் குலச்சிறையார் இருவரும் சைவம் காத்தனர். அவனது துணைவியார் அமைச்சரின் உதவியுடன் ஞானசம்பந்தர் திருமறைக்காட்டிலிருப்பதை அறிந்து அவர் தங்கள் நாடு வரக் கேட்டனர். அப்பரை சோழநாட்டுத் திருத்தலங்கள் செல்லக்கூறி தாம் பாண்டிநாடு சென்றார்.

(தொடரும்)



# சைவத்திருமுறைகள் தொடரட்டும்...

முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய் பின்னைப்புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனாய் நிற்பவன் பரம்பொருளான சிவபெருமான். அவனைப் போலவே பழமையும் புதுமையும் பொலிவது சைவசமயம்.

திருமறை என்கிற ''வேதத்தைச் செய்தவன் இறைவன் சிவன். இது சைவசமயிகளின் நம்பிக்கை. வேதத்திற்கு ஆரம்பம் என்பது யாருமே சொல்லாதது. அப்படி ஒன்று இல்லை என்பதே சைவர்களின் நம்பிக்கை.

ஆனால் வேதத்தை இறைநூல் என்று ஏற்றுக்கொண்டாலும் கிறிஸ்துவ முகமதிய சமயங்கள் போல, அதுவே முடிந்த முடிவு என்றும் அதற்கு மேலே வேறுநூல் பிறத்தல் தவறென்றோ ஹிந்துக்கள் நம்பவில்லை.

இதனால் தான் ஸ்ருதிகளான வேதங்களைத் தொடர்ந்து ஸ்மிருதிகளும், புராணங்கள் இதிஹாசங்கள் ஆகமங்கள் தோத்திரங்கள் சாஸ்திரங்கள் தத்துவங்கள் என்றெல்லாம் நம் சமய நூல்கள் விரிந்தன. விரிகின்றன.முடிவின்றித் தொடர்கின்றன.

''இல்லாததொன்றிலிருந்து இருப்பது பிறவாது' என்பது சைவசித்தாந்தம். எனவே தான் இறைவாக்கின் தொடர்ச்சியாக ''மானிட வாக்கும்' சைவத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. வெளிப்படா நிற்கும் இறைவனே அநுபூதிமான்களின் வாயிலாய்ப் பேசுவதாய் அவை கொள்ளப்பட்டன. இவ்வாறு சைவர்கள் ஏற்றுப் போற்றியதால் தான் சைவநூல் வரிசை பல்கிப்பெருகிற்று. இதனால் பின் வந்த நூல்களும் முன் வந்த திருமறையாம் வேதத்திற்கு ஒப்பாய் வைத்துப் போற்றப்பட்டன.

தமிழிலக்கணமும் இறைவனே முதல் நூலோன் என்று கூறும் -
வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூலாகும்
என்கிறது தொல்காப்பியம்.

இவ்வாறு தமிழோடு பின்னிப்பிணைந்து பிற்காலத்தில் தோன்றிய அருளாளர்களின் வாக்குகளையும் அதன் தகுதி கண்டு ஏற்றுப் போற்றிய திறனாலேயே சைவம் நிமிர்ந்து நிற்கிறது.

இன்றைக்கு திருமுறைகளை விடுத்து அதற்கு முந்தைய வேதாகமத்தை மட்டுமே சைவம் என்று சிந்திப்பது எவராலும் இயலாத ஒன்றேயாம். அப்படிச் சிந்தித்தால் அது சைவமாயும் தோன்றாது. இதனால் தான் தன்னை அழிக்க வந்த புறச்சமயங்கள் அழிந்து போக தானே வியாபகமாய் நிற்கும் வெற்றி உடையதாகச் சைவம் விளங்குகின்றது.

''தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா பின்பு
தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா'

என்ற சித்தாந்த ஆசிரியர் உமாபதி சிவாச்சார்யாரின் கருத்தும் இதனுடன் இணைத்து நோக்குதற்குரியது.

இதே போலவே இறைமறுப்பையும் கூட ஏற்றுக் கொள்ள வல்ல சைவத்தின் சீர்மையையும் பெருமையையும் அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன் என்ற சுந்தரர் திருவடிவகள் காட்டி நிற்பதாகச் சுட்டுவர் அறிஞர்.

இவ்வாறு தகுதி கண்டு எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் சைவத்திருமரபு இடையில் சில இடர்களுக்கு உள்ளாயிற்று. கட்டமைக்கப்பட்ட நிர்வாகவியலுக்கு உட்படுத்தப்பட்ட சமயங்களான கிறிஸ்துவம் போன்ற சமயங்களின் வருகையும் உலகியல் வளர்ச்சி வேகமும் சைவத்தையும் ஒரு எல்லைப்படுத்த வேண்டும் என்ற ஆவலை அவ்விடைக்காலத்தில் உருவாக்கியிருக்கலாம். சைவத்தின் மேற் கொண்ட அளவற்ற அக்கறையே இதற்கு காரணமாயிருந்த போதிலும் அது சைவத்திற்கு நன்மை தருவதாக இல்லை.

மற்றைச்சமயிகள் போல சீருடை ஒன்றைப்புனைந்து கொண்டு குறித்த ஒரு நாளில் ஒரு வேளையில் ஆலய வழிபாடாற்றல், ஒரு சமயத் தலைமைப் பீடம் என்பது போல உருவானதே இந்த திருமுறைகளை

எல்லைப் படுத்தும் எண்ணமுமா என்பது ஒரு சிந்தனைக்குரியது.

தேவாரம் வேதசாரம் என்றும் திருவாசகம் உபநிடதசாரம் என்றும் யாழ்ப்பாணத்துக் காசிவாசி செந்திநாதையர் அவர்கள் அறுதி இட்டு உரைத்திருக்கிறார்கள். இப்படி அற்புதமான திருமறைச்சாரமாக அமைந்த தெய்வத் தமிழ்த் திரும்முறைகள் எங்கும் சிதறிக் கிடந்தன. இவற்றை ஒரு ஒழுங்குக்கு கொண்டு வரவேண்டும் என்றும் அவை சைவசமயிகளின் புழக்கத் தில் வரவேண்டும் என்றும் எவரும் விரும்புவது இயல்பு. அது போலவே, இத்தொகுப்பினைச் செய்ய சோழப்பேரரசனான இராஜராஜன் விழைந்தான். பிள்ளையார் பேரருள் பெற்ற நம்பியாண்டார்நம்பி அடிகள் அதற்கு உற்ற துணை செய்தார். அரசன் ஆணையை இறைவன் ஆணையாய் ஏற்று சிவப்பணியான திருமுறை தொகுப்புப் பணியை நம்பி அடிகள் செய்திருக்கிறார். பொல்லாப் பிள்ளையாரிடம் பாடம் கேட்ட அநுபூதிச் செல்வரான நம்பியாண்டார் நம்பிகள் சைவத் திருமுறைகளைப் பதினொன்றாக வகுத்தருளியிருக்கிறார்.

ஆனால் ஆய்வாளர்கள் சிலர் நம்பியாண்டார் நம்பி தொகுத்தது முதல் ஏழு திருமுறைகளையே என்று குறிப்பிடுகின்றனர்.. தேவாரத்தைத் தொகுப்பதே அவர் பணியாய் இருந்தது என்பது அவர்களின் வாதம். அதனாலேயே அவ்வேழு திருமுறைகளும் ''அடங்கன் முறை' என்று அழைக்கப்படுகிறது என்று அவர்கள் காட்டுகின்றனர். அவர்களின் கருத்தின் படி நம்பியடிகள்-இராஜராஜன் காலத்தின் பின்காலத் தின் தேவை உணர்ந்தே எட்டாம் ஒன்பதாம் பத்தாம் பதினோராம் திருமுறைகள் தொகுக்கப்பட்டதாக குறிப்பிடுவர். ஆனால் உமாபதி சி வாச்சார்யார் பாடியருளிய ''திருமுறை கண்ட புராணத்தில்' பதினொரு திருமுறைகளையும் நம்பியாண்டார் நம்பியடிகளே தொகுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

எவ்வாறோ இது ஒரு அரசபணியாகவே நடந்தேறியிருக்கிறது. விரவிக்கிடந்த ஓலைச் சுவடிகளை எல்லாம் ஒன்று சேர்ப்பதும், அவற்றைத் தொகுப்பதும், தொகுப்பதற்குரிய நிதிப்பங்களிப்பினைச் செய்வதும், அத்தொகுதியை சைவ உலகில் பரவச் செய்வதும் அக்காலத்தில் அரச னால் அன்றி மற்றோரால் ஆகவல்ல காரியமல்ல.

தில்லையிலே திருச்சிற்றம்பலமருகில் தேவாரச்சுவடிகள் ஓர் அறையில் வைத்துப் பூட்டப்பட்டுக் கிடந்தன என்றும், தேவாரமுதலிகளான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியவர்களின் திருவுருவங்களைக் கொண்டு சென்று அவற்றின் திருமுன்னிலையில் அத்தேவாரஅறை திறப்பிக்கப்பட் டதென்றும் அங்கு கிடைத்த தேவாரங்களே முதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டன

என்பதும் திருமுறைகண்ட புராணம் வழங்கும் செய்தி.. இத்தகவலை அடிப்படையாகக் கொண்டு தமிழ்த் திரைப்படத்திலும், இவ்வாறு ஒரு காட்சி அமைந்துள்ளது.

ஆக இராஜராஜன் காலத்தில் ஏழாக தொகுக்கப்பட்டவை பின்நாளில் பதினொன்றாக விரிந்தது. அதன் பின், சேக்கிழார் பெருமான் அவதரித்து ''பெரியபுராணம்' என்கிற திருத்தொண்டர் புராணத்தைச் செய்தருளினார். இதன் சிறப்பும் மேன்மையும் கருதி அதனைச் சைவ உலகம் பன்னிரண்டாம் திருமுறையாக ஏற்றுக் கொண்டது. இது சைவச்சிந்தனைக்கு ஏற்றதாயும், உரியதாயுமே கணிக்கப்பெறுகின்றது.

ஆகவே எவ்வாறாயினும் இன்று எமக்குக் கிடைத்துள்ள அரும்பெருஞ்சொத்தான சைவத் திருமுறைகள் பன்னிரெண்டும் ஒரே நேரத்தில் தொகுக்கப்படவில்லை என்பது தெளிவு.
பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் சோழப்பேரரசின் இறுதிக்காலத்தில் பெரியபுராணம் இணைக்கப்பட்டதுடன் சைவத்திருமுறை பன்னிரண்டு என்றே சைவ உலகு திருப்தி உற்றது. அதற்குப் பின் அவ்வளவே திருமுறைகளின் எல்லை என்று முடிவு செய்ய நேரிட்டு விட்டது. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

சைவ அரசு ஒன்று இல்லாமைபோலி அருளாளர்களின் வருகைபிற மதத்தவர்களின் ஆதிக்கம், தமிழரசு நிலை குலைந்தமை, முகமதிய அரசர்கள் படையெடுத்தமை, எப்போதும் குழப்பநிலை நீடித்தமை, சைவாலயமரபுகள் சிதைவுற்றமை, தோத்திரங்களை விட சாத்திரநூல்களே முதன்மை பெற்றமை, சிவ வழிபாட்டோடு இணைந்த விநாயகர், முருகன் ஆகிய சிவகுமார மூர்த்தங்களின் வழிபாடுகளும் எழுச்சியுற்றமை போன்ற சில பல காரணங்களை இதற்குக் காட்டலாம்.

எவ்வாறோ பதின்மூன்றாம் நூற்றாண்டுடன் முற்றுப்பெற்ற திருமுறைத் தொகுப்பை ஏன் தொடரக் கூடாது? என்பதே இன்றுள்ள வினா.இடையில் இருக்கிற எழுநூறாண்டுகளில் எத்தனையோ, சைவத்திருநூல்கள் மலர்ந்துள்ளன. அவற்றில் தகுதி கண்டு ஏன் திருமுறைகளாக இணைத்து வகுத்தலாகா? என்பதும் இவ்வினாவின் தொடர்ச்சியே ஆகும்.

இப்போதெல்லாம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டே என்பதற்கு ஆதாரமாகச் சொல்லப்படுவனவும் சாதாரண விடயங்களாகவே உள்ளன. எந்த ஒன்றாயினும் அதற்குத் தத்துவம் கண்டு பிடித்து விடுகிற மரபின் வெளிப்பாடாக அதனைக் கருத முடிகிறதே அன்றி வேறொரு செய்தியும் அதில் பொதிந்திருப்பதாகத்

தெரியவில்லை.

உதாரணமாக ''சிவஞான போத சூத்திரங்கள்' பன்னிரண்டு என்ற அடிப்படையிலேயே பன்னிரு திருமுறைகள் வகுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். காலத்தால் பிந்தைய சிவஞானபோதத்தினைக் காலத்தால் முந்தைய திருமுறைகளுடன் முடிச்சுப்போடுவது ஏற்கத்தக் கதல்லவே ?
எனவே திருமுறைகள் தொடரலாமா? என்பதே இன்று எம்முன் உள்ள வினாவாகும்.

அவ்வாறாயின் சர்ச்சைக்குரியதாக அல்லாமல் அநேகமான தமிழ்ச்சைவர்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அருளாளர்கள், அநுபூதிமான்களின் அருளிச் செயல்களாக விளங்குபவற்றை தொடர்ந்து திருமுறைகள் ஆக கால அடிப்படையில் வகுக்கலாம் அல்லவா?

முக்கியமாக பெரியபுராண த்தை அடுத்த காலப்பகுதியில் எழுந்தது கந்தபுராணம்.ஏராளமான புராணங்கள் எழுந்த போதிலும் இதுவும் திருவிளையாடற்புராணம் பெரியபுராணம் என்னும் மூன்றும் மட்டுமே சிவபெருமானின் முக்க ண்களுக்குநிகராகச் சைவர்களால் போற்றப்படுகின்றன.
ஆக பன்னிரண்டாம் திருமுறையாக அதிலொன்றான பெரியபுராணம் இடம்பெற்று விட்டதால் பதின்மூன்றாம் திருமுறையாக கந்தபுராணத்தையும் திருவிளையாடற்புராணத்தையும் இணைக்கலாம்.

தத்துவநூலான திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாக வகுக்கப் பட்டிருக்கிறது. எனவே, தயக்கமின்றி பதினான்காம் திருமுறையாக சைவப்பெருமக்கள் சந்தனாச்சார்யார்கள் என்று சமயாச்சார்யார்களான முதலெட்டுத் திருமுறை ஆசிரியர்களுக்கு நிகராகப் போற்றும் ஆசிரியர்களும்
பிறரும் செய்த சைவசி த்தாந்தநூல்களை வகுக்கலாம்.

அது போலவே அருணகிரிநாதர் சைவப்பெருமக்கள் அனைவரதும் பக்திக்குரியவராகப் போற்றப் பெறும் அருளாளர். அவர் அருளிய திருப்புகழ், கந்தரனுபூதி கந்தரலங்காரம் கந்தரந்தாதி போன்றவற்றை பதினைந்தாம் திருமுறையாக வகுக்கலாம்.

முருகன் புகழ் மாலையான திருமுருகாற்றுப்படை பதினோராம் திருமுறையில் முன்னரே வைக்கப் பட்டுள்ளதாலும் குமரக்கடவுளை ''ஆறுமுகச்சிவம்' என்றே சைவம் ஏற்றுப் போற்றுவதாலும் அருணை முனிவரின் முருகன் பேரிலான துதி மாலைகள் சைவத்திருமுறையாதல் தவறல்ல என்றே கொள்ள இடமுண்டு.

பதினாறாம் திருமுறையாக இதன் பின்னும் உருவான பதினெட்டாம்

நூற்றாண்டு வரையான தாயுமானவர் பட்டினத்தடிகள் போன்ற ஏராளமான அருளாளர்களின் திருமொழிகளை வகுக்கலாம். அதிலே மிகவும் சிறப்பாக சைவசமயிகள் ஏற்றுப்போற்றுகின்ற தேவராஜசுவாமிகள் பாடிய கந்த சஷ்டி கவசங்கள் ஔவையார் அருளிய விநாயகர் அகவல், அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதி போன்ற அற்புத நூல்களையும் சேர்க்கலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் வந்த அருளாளர்களான இராமலிங்க வள்ளலார், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் யாழ்ப்பாணத்து சிவயோகர் போன்ற ஏராளமான அருளாளர்களின் வாழ்வு, வாக்குத் தொடர்பில் இன்னும் சில சர்ச்சைகள் மிஞ்சி இருப்பதாலும், சில சைவர்கள் அவர்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதாலும் அவற்றை இப்போதைக்குத் திருமுறைகளுக்குள் இணைக்காமல் வைத்திருக்கலாம்.


ஆனால் அநேகமான சைவத்தமிழர்களால் பன்னிருதிருமுறைகளுக்கு நிகராக ஏற்றுப் போற்றப் பெறும், அற்புதங்கள் செய்யும் அரிய தமிழ் நூல்களை சைவத்திருமுறைகளாக வகுப்பதில் தடையொன்றும் இல்லையே? இதனைச் செய்யலாமா? செய்யலாம் எனில் யார் பூனைக்கு மணி கட்டுவது? கட்ட விழைபவர் கண்டனங்கள் வந்தால் ஏற்கத்தயாரா? என்பனவே இப்போதுள்ள வினாக்கள்.

சைவத்தில் புரட்சிக்கும் புரட்சியாளர்களுக்கும் குறைவே இருக்கவில்லை. சேக்கிழார் அவ்வாறான ஒருவரே. அவர் கண்ணப்பரையும், நந்தனாரையும், அதிபத்தரையும், இன்னும் சாக்கியரையும் சைவப்பெருங்குரவராக மாற்றிய சிவனருட்செல்வர்.அத்தகு ஒருவர் சில வேளை இப்பணியினையும் செய்து மேன்மை கொள் சைவநீதிஉலகமெல்லாம் விளங்கச் செய்வார்.

இன்றைக்கும் தமிழகத்திலும் ஈழத்திலும் சைவாதீனங்கள் பல சிறப்போடு விளங்குகின்றன. அறிவிலும் பக்தியிலும் ஆற்றலிலும் தக்கோர் பலர் அங்கே மஹாசந்நிதானங்களாக அருளாட்சி செய்து வருவதையும் காண்கிறோம். அவர்கள் சரியெனக் கருதின் இத்திருமுறைத் தொகுப்பினை தொடர உதவ வேண்டும்.

இத்திருமுறைத் தொகுப்பு காலத்தின் தேவையாக, சிவப்பணியாக மேன்மேலும் சிறப்புறுமா? என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது..

உலகெலாம் உணர்ந்(து) ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.



# அறிவோம் ஆன்மீகம் -4

சென்ற பகுதியில் எப்படி மனித இனக் குழுக்கள் தலைவர்களால் ஆளப்படும் சிறு அரசுகளாகத் தோற்றம் பெற்றன என்பதை பார்த்தோம். அப்படி உருவான தலைவர்களின் ஆணை இடும் இடங்களாக முதலில் சிறு குன்றுகளே தோன்றின என்கிறார்கள் மாந்தரியல் அல்லது மானுடவியல் ஆய்வாளர்கள். காரணம் முதலில் மக்களின் பாது காப்பான வாழ்விடங்களாக மலைக் குகைகளே விளங்கின. அவைதான் விலங்குகளிடம் இருந்தும் புயல், மழை, காற்று, இடி, மின்னல் போன்ற இயற்கை ஆபத்துகளில் இருந்தும் எம் மூதாதையரைப் பாது காத்தன.

முதலில் தோன்றிய சிவ வழிபாடும் பருத்தி ஆடைகளும் உலோக ஆயுதங்களும் கண்டு பிடிக்கப்படாத காலத்தில் இப்படியான மலைவாழ் மக்களின் மறைந்த தலைவனின் அடையாளமாகவே இருத்தல் வேண்டும். யானை புலி போன்ற மிருகங்களின் தோலாடை சிவனின் ஆடையாகவும் மழு எனப்படும் கற்கோடாலியும் கையில் குட்டி மானும் மர ஈட்டியுமே பிற்காலத் தில் சூலாயுதமாக மாற்றம் பெற்றன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சிவனுக்கு அடுத்த தலைவியாக காடாள் அல்லது காளி எனப்படும் பெண் தலைவியினால் அக்குழு ஆட்சி தொடர்ந்து இருக்கக் கூடும். அவளது மகன் கந்தன் அல்லது முருகன் வழிபாடும் தலைவனாக மாறி இருத்தல் வேண்டும். இவையே பின்னாளில் அரசு ஆட்சி அதிகார முறையாக மாறியிருக்கலாம் எனவும் கூறுவர். இவ்வாறே ஐயனார், வீர பத்திரர், பைரவர் போன்ற தலைவர்களும் வழிபாட்டுக்கு உரியவர்களாக மாறினர்.

இந்த முறையில் பின்னர் வந்த தமிழர்

பண்பாடு நடுகல் எனப்படும் மறைந்தவர் நினைவாக நட்டு வைக்கப் பட்ட கற்களும் அவற்றுக்குப் படையல் போன்ற உணவு வகைகளை வைத்து வழிபடும் முறைகள் தோன்றின. இன்றும் தமிழ் மக்களிடையே இறந்தவர் நினைவாக எட்டாம் நாள் வழிபாட்டு முறையும் இறந்தவரின் விருப்ப உணவு வகைகளைப் படையல் வைக்கும் வழக்கமும் இருப்பதை நாம் காண்கிறோம். இவ்வழக்கம் புலம் பெயர் மக்களிடையேயும் சில இடங்களில் காண்கிறோம்.

தமிழர் வாழ்வில் தாய் தந்தையரும் அவர் தம் முந்தையரும் கடவுள்களாக மறைந்த பின்னர் மதிக்கப் படுகிறார்கள் என்பதை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த திருவள்ளுவர் இந்தக் குறளில் மிக அழகாக பதிந்து வைத்துள்ளார். இறந்தார்க்கும் இல்வாழ்வான் துணை என்றும் தென்புலத்தார் தெய்வம் தான் ஒக்கல் என தென்புலத்தார் எனப்படும் இறந்தவர், தெய்வம் விருந்தினர் உறவினர் தான் என்றும் இறந்தவரை தெய்வத் திற்கும் முதன்மையான இடத் தில் வைத்துக் கூறி இருப்பது இறந்த எமது முன்னோர்களே எமது வழி படும் தெய்வங்களாக புராணங்களில் மாற்றம் அடைந்து ள்ளனர் என்பதை அறியலாம்.

இவை பல ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னர் தோன்றின என்பதற்கான ஆதாரங்கள் திருக்குறள் உள்ளிட்ட சங்க கால இலக்கியங்களில் பதிவான உண் மைகள். முதலாவது தமிழ்ச் சங்கம் 50,000 வருடங்களுக்கு முன்னர் தோன்றியதாக முருகனின் காலம் 14000 வருடங்களுக்கு முந்தையது எனவும் கூறுகின்றனர். இவை தோன்றிய நிலப் பகுதி குமரிக் கண்டம் என்ற கடலால் அழிவுற்ற மாபெரும் நிலப் பரப்பு என கடலாய்வுகளும் உறுதிப்படுத்து கின்றன.

இந்த வரலாற்றில் இலங்கைத் தீவு அப்பெரிய நிலப் பரப்பின் இன்று எஞ்சி உள்ள பகுதியாகும். முதலாவது தமிழ்ச் சங்கம் தோன்றிய பகுதி இன்று மாத்தற எனச் சிங்களப் பெயர் வடிவம் கொண்ட மதுரையாகும். இலங்கையின் பழைய வரை படங்களில் மதுர எனவும் இன்றைய மொழி வழக்கில் மாத்தற எனவும் திரிபு பெற்று விளங்குகிறது. காலத்துக் குக் காலம் கடல் அழிவுகள் ஏற்பட ஏற்பட மக்கள் கிழக்கே இந்தோனேஷியா சீனம் எனக் குடி பெயர்ந்து தம்முடன் மதுரை என்ற ஊர்ப் பெயரையும் கிழக்கே இந்தோனேஷியாவிலும் வடக்கே பாண்டி நாட்டில் மதுரை, மத்தியில் சென்னை எனப்படும் மதராஸ் வட

இந்தியாவில் மதுரா எடுத்துச் சென்று வரலாறு படைத்தனர் தமிழர்.

இன்று மானுடயியல் கடலியல் சுற்றுச் சூழல் ஆய்வாளராக விளங்கும் திரு ஒரிசா பாலு அவர்களின் கூற்றுப்படி தமிழன் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே கடலோடிககளாக உலகம் எங்கும் பரவினதற்கு ஆதாரமாக இடப் பெயர்களும் பிற மொழிகளில் தமிழ் வேர்ச் சொற்களும் காணப்படுவதைப் பட்டியலிட்டுள்ளார்.

நகர அமைப்பிலும் கோயில் கட்டிடக் கலையிலும் தமது திறமையை இன்றும் வெளிப்படுத்தும் மதுரை நகர வடிவமைப்பும் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலும் இத்தனை ஆயிரம் ஆண்டுகளின் பின்னரும் வெளிநாட்டு விற்பன்னரால் வியப்போடு திகைக்க வைத்துக் கொண்டிருக்கின்றன.

பௌத்த வரலாற்று நூல்களின் கூற்றுப் படி கடைசியாக நிகழ்ந்த கடல் அழிவு இராவணன் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்டது எனவும் அதன் போது இன்றைய இலங்கையின் அளவைப் போன்று 11 மடங்கு நிலப்பரப்பு கடலில் மூழ்கியது எனத் தெரிகிறது. இன்று கடலடி ஆய்வுகளைச் செய்து வரும் கிரகம் ஹன்கொக். ஒரிசா பாலு போன்ற ஆய்வாளர்கள் கடலடியில் ஆயிரக்கணக்கான கட்டிடச் சிதைவுகளைக் கண்டறிந்து பட்டியலிட்டு ஆய்வாளர் மத்தியில் பரபரப்பை கிளப்பி வருகின்றனர். ஆனால் சிங்கள மற்றும் ஆரிய வட இந்திய ஆட்சியாளரும் தமிழர் வரலாற்றை மறைப்பதிலே மிகு ஆர்வமாகச் செயல்பட்டு வருவதனால் தமிழர் பற்றி வரலாற்று உண்மைகள் வெளிவர பல தடை களை சந்திக்கிறது. இவை எல்லாம் யுரியூப் இணையத்தில் பதிவாகி உள்ளன.

எப்படியோ கோயில்களும் கொடி மரங்களும் இன்று எல்லா மதத்தினராலும் கடைப் பிடித்து வரும் மதச் சம்பிரதாயமாகவும் சடங்குகளாகவும் மாறிவிட்டதைக் காண்கிறோம். இப்படித் தமிழரின் வரலாற்றில் உதயமாகி உருவான கோயில் வழி பாட்டு முறையில் இன்று தமிழ் மொழியும் தமிழனின் முக்கியமும் எப்படி இல்லாமல் போயின என்பதை அறிவோம் ஆன்மீகம் வெளிப்படுத்த முற்படும்.

(அடுத்த இதழில் தொடரும்)

திருச்சிற்றம்பலம்

# சைவநெறிக்கூடம்

## அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

Der Verein SAIVANERIKOODAM
Arulganamigu Gnanalingesurar Tempel
Europaplatz.01, , 3008 Bern, Switzerland
☎ 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96 / 031 302 09 56
www.saivanerikoodam.ch
facebook.com/saivanerikoodam
saivanerikoodam@hotmail.ch


# வழிபாட்டுநாட்காட்டி

*வாரத்தில் 7 நாட்களும் காலை 08.00 மணிமுதல் 20.30 மணிவரை திருக்கோவில் திறந்திருக்கும்.*
*மாலை 18.30 மணிமுதல் 20.00 மணிவரை வழிபாடு இடம்பெறும்.*

## மீனம் (பங்குனி)

07.03.16 திங்கட்கிழமை — பெரும் சிவனிரவு நோன்பு (சிவராத்திரி), மாலை 18.00 மணிமுதல்

22.03.16 செவ்வாய்க்கிழமை — முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல்

23.03.16 புதன்கிழமை — பங்குனி உத்திரம் மாலை 16.30 மணிமுதல்

## மேழம் (சித்திரை)

13.04.16 புதன்கிழமை — மேழப்புத்தாண்டு (சித்திரைப் புதுவருடம்) - துர்முகி வருடப்பிறப்பு

21.04.16 வியாழக்கிழமை — மேழத்திங்கள் முழுமதி - சித்திரத்திருமகன் (சித்திரகுப்த) நோன்பு, காலை 10.00 மணிமுதல்

## விடை (வைகாசி)

21.05.16 சனிக்கிழமை — முழுமதி சிறப்பு வழிபாடு, விடைமுறம் (வைகாசி விசாகம்) திருவழிபாடு மாலை 16.30 மணிமுதல்

28.05.16 சனிக்கிழமை — சைவமும் தமிழும் போட்டி நிகழ்வு சூரிச்இ சியேன், பாசல்

29.05.16 ஞாயிற்றுக்கிழமை — சைவமும் தமிழும் போட்டி நிகழ்வு பேர்ன்இ ஜெனிவா

## ஆடவை (ஆனி)

19.06.16 ஞாயிற்றுக்கிழமை — முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல்

## கடகம் (ஆடி)

10.07.16 ஞாயிற்றுக்கிழமை — ஆடவை (ஆனி) உத்தரம், மாலை 17.00 மணிமுதல்

16.07.16 சனிக்கிழமை — கடகப்பிறப்பு (ஆடி), மாலை 18.30 மணிமுதல்

19.07.16 செவ்வாய்க்கிழமை — முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல்


12வது
ஆண்டில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
European Tamil Radio
ETR
24மணி நேர வானொலிச் சேவை
தொலைபேசியில் வானொலியைக் கேட்டுமகிழ:
Germany: 0221 98 88 014 - Swiss: 044 51 33 0 45
France: 01 80 14 06 59 - England: 0330 332 6349
Denmark: 078 77 25 27 - Canada: 647 496 9717
USA: 979 282 4059 - Australia: 02 8072 5194
www.etr.fm